"சதி அஹல்யா"

நவரசந் ததும்பும் புண்ணிய புராண சரிதை.

கற்பின் நிலை

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்
சேலம்

சதி அஹல்யா

டைரக்டர்
டி. ஆர். சுந்தரம்

கலியின் சிலை

டைரெக்டர் Mr. T. R. சுந்தரம் B. A. B. Sc. (Leeds.)

தயாரித்தவர்கள்:—

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்,
சேலம்.

சதி அஹல்யா.

(கதைச் சுருக்கம்.)

சீதாதேவியின் சுயம் வரத்திற்காக மிதிலையை நோக்கி வந்துகொண்டிருந்த விஸ்வாமித்திரர் தன்னுடன் வரும் ஸ்ரீராமர், இலக்ஷ்மணருக்கு இயற்கையழகை எடுத்துக்கூறி வரும்போது, வழியில் ஜீவனற்று விளங்கும், ஒருகாட்டைக் கண்டு ஸ்ரீராமன் அதிசயிக்கிறான். கௌசிகர் இந்தக்காடு "அகலிகை" என்ற மங்கையின் காரணமாக இந்நிலை பெற்றுள்ளதென்ற வரலாற்றைக் கூறுகிறார்.

பிரமனின் புதல்வி அகலிகை பூங்காவில் உலாவிக்கொண்டிருக்கும்போது, நாரதர் வந்து விவாஹ விஷயமாகப் பேசிவிட்டு, இந்திரலோகம் செல்லுகிறார். இந்திரனிடம் அகலிகையின் அழகையும், பருவத்தையுங்கூறி அகலிகை பால் இந்திரனைக் காதல் கொள்ளச் செய்கிறார்.

அகலிகையின் விவாகத்தைப்பற்றி மிகக் கவலைகொண்டிருக்கும் பிரமனிடம் நாரதர் சென்று "பூப்ரதக்ஷணப் போட்டி"யில் வெற்றியடைந்தவர்க்கு அகலிகையைத் திருமணம் முடிக்கலாமென யோசனை கூறி, போட்டிக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்து யாவருக்கும் விளம்பரமும் செய்யப்படுகிறது. இந்திரனுள்பட யாவரும் குறித்தகாலத்தில் பூப்ரதக்ஷணம் செய்யப்புறப்படுகிறார்கள்.

பிறகு, கௌதமரிஷியிடம் நாரதர் வந்து, அகலிகையை மணமுடித்துக் கொள்ள கௌதமரை இணங்கச்செய்து, பிரமனிடம் அழைத்துப்போகும் வழியில் கன்று ஈணிக்கொண்டிருக்கும் பசுவை வலம்வரச்செய்து, பிரம்மலோகம் செல்லுகிறார். நாரதர்-துவிமுகப் பசுவை கௌதமர் வலம்வந்த விஷயத்தைக் கூறி, பூப்ரதக்ஷணம் இதற்குச் சமமென எடுத்துக்காட்டி, அகலிகையை கௌதமருக்கு விவாஹம் செய்வித்து அனுப்புகிறார். பூப்ரதக்ஷணம் செய்து வந்த இந்திரன், விஷயத்தைக்கேட்டு, வெட்கி இந்திரலோகஞ் செல்லுகிறான்.

ஒருநாள் இந்திரன் நடுநிசியில் கௌதமவனம் சென்று சேவல் உருக்கொண்டு கூவ, கௌதமர் பொழுது புலர்ந்ததென நம்பி கங்கைக்கு நீராடச் செல்லுகிறார். இந்திரன் கௌதமர்போல உருக்கொண்டு அகலிகையை அணைந்திருக்கும் சமயம் கௌதமர் வந்து உண்மை தெரிந்து இந்திரனை உடல்முழுதும் யோனிக் கண்களடையும்படிக்கும், அகலிகையை கல்லாய்ச் சமையும்படிக்கும் சபிக்கிறார்.

இவ் வரலாற்றைக் கூறிய கௌசிகர் அந்த ஜீவனற்ற காட்டில் ஒரு கல்லைக் காட்டி ஸ்ரீராமனின் பாதஸ்பரிசம் படச்செய்கிறார். அகலிகை கல்லுரு நீங்கிப் பெண்ணுருவாக, அங்கு கௌதமர் தோன்ற ஏற்றுக்கொள்ளுகிறார்.

விரிந்த கதை வெள்ளித் திரையில்.

மங்களம்.

இரா: அம்ஜ்ஜம்மாள் 24-4-1937

உ

சதி அஹல்யா பாட்டுகள்.

பாட்டு நெ. 1. [கோரஸ்.

ஓம் கணபதியே மாகுணநிதியே
உயர்சிவ பசுபதி ஜெயஸுதனே கதி
பூம் பதமே நிதம் பூஜை செய்தோமே
புனித சௌபாக்யம் இனிதருள் தாமே
புகழும் சுகமும்தர போற்றி உய்தோமே
ஸாதகமேபுரி சதுர்முகன் தேவி
ஸகல கலா மாசமயமும் மேவி
சரணம் சரணம் தமிழ்தாயே சஞ்சீவி.

பாட்டு நெ. 2. [இராமன்.

மறையோர்கள் நிறையோக வனமே-மா
குறையாத வரத்யாகம் கொண்டுலகில்
தொண்டு செய்யும்
பாரில் வனமிது மிகப்பாழடைய காரணமேன்
நேரிலெடுத்தோதிடுவீர் நீத குருநாத நிதி

பாட்டு நெ. 3 [அகலிகை தோழிகள்

(அகலிகை.)

கூடிக்குலாவியே ஓடிவிளையாட வருவீர்
ஈடில்லாத மலர் சோலை சிங்காரம்
இன்ப சுகந்த மளிக்குமின் நேரம்
வேடிக்கையா யிருப்போமது சாரம்
வெற்றி வசந்தமியற்றிக் கொண்டாடவே வருவீர்.

(தோழிகள்.)

குணவதி ஸ்ரீமதி அகலிகா மாதே
கோகனகத்திரு மோகனப் பாதமே பணிந்தோம்.

பாட்டு நெ. 4. [அகலிகை.

வாலிபக்காலம் போலநகூலம் வாய்க்குமோ
  சீலம் தீர்க்கவிசாலம்
பாலித மோகப் பருவம் கொண்டேனே
  பாவை யென் தாகம் பெருகக் கண்டேனே
  பதம்பெருவேனோ மெய்யாய்த்தானே
மணமில்லா மலர் போலாரும் வாழ்வே
  [illegible] தனித்திருந்தாலு [illegible] வாழ்வே
  மங்கை பாக்யம் [illegible] யோக்யம்.

பாட்டு நெ. 5. [நாரதர்.

[illegible] தார மஹாநுப [illegible]
  தெய்வமாதவ —தேவா
மூவா [illegible] ஹரி முகுந்தனே
  முதல்வ சுகந்தனே [illegible]
கரிதாரும் சதா கன [illegible] பதா; கருதும்வேத
  கீதம் ஸகலமுடிநியதி கா—காவாய் கருணாகரப்
  பரம்பொருளெனக் [illegible] தாயகனே.

பாட்டு நெ. 6 [நாரதர்

அ[illegible] கௌருபவதியாம் அகலிகை.
[illegible] கோடி மடவார் [illegible]
  ரமணியாம் சமலில்லா தமிழ்பதனி
சதுர்முகன் உண்மையான சைத்திரம்
  சமைந்ததோர் பெண் [illegible] விசித்திரம்
புதுமையான உருவம் இளம் பருவம்
  புனிதையே வனிதையாம் இனிதுரைக்க.

பாட்டு நெ. 7. [நாரதர்.

சத்யலோகப் பதியே [illegible] நின்
  சன்னிதானத்துதியே செய்தேனே
நித்தியவேத விதியே சொல் போதா
  நிகில ஜீவநிதியே என்தாதா
இத்தகி விசனமுற்றிருப்பதும் தெரியேன்
  இறைவனின் திருவுள்ள மேதோ அறியேன்.

K. Balasubramaniam

பாட்டு நெ. 8 [இந்திரன், நாரதர்.

இந்] நானிதில் ஜெயிப்பேனோ முனிநாதா
  எனிதில் வினில் சந்தேகம் சங்கீதா
    இந்த்ரனின் திறமையை தெரிகுவீர் நீதா.

நார] மானினி அகலிகை தனைப் பெரும் பாக்யம்
    மாவுலகி லெவர்க்கோ அறிகிலேன் யோக்யம்
  தானினி பெரிதென புகலும் சிலாக்யம்
    தலைவிதிபோல் வரும் தவராதென்வாக்யம்
    சத்யமிதே சொன்னேன்.

(தொகையறு.)

இந்] மறைந்து நீர் கலகம் செய்தால் வரும் அவமானம் தானே
  நிறைந்த மூவுலகும் கீர்த்தி சேர்நிலை நிறுத்துவேனே.

(பாட்டுத் தொடர்ச்சி.)


  எனிதில் வீணில் சந்தேகம் [illegible]
    இந்த்ரனின் திறமையை தெரிகுவீர் நீதா.

பாட்டு நெ. 9. [அகலிகை.

பூங்காவன மெனும் புதுமலர்ச் சோலை
  பூசல் தென்றல் வீசுட் மாலை
  [illegible] பொருந்துமிக் காலை
மாங்குயில் [illegible] மாமயிலாட
  மையலாய்த் துள்ளி இமான் குதித்தோட
[illegible] முதாய்த் தெளிந்த நீரோடை
  தேகப் பரவ [illegible] ரமணமோடு
  ஈங்கமைந்த செயல் இறை[illegible]னின் லீலை.

பாட்டு நெ. 10. [இந்திரன்.

மதியே மா[illegible] மகா மோகமாகினேனே
மாலை நேரமிதில் [illegible] தான்
  மனமே விசனமதால் மகாமோகமாகினேன்
தயை [illegible]வாய் பெண்ணே, [illegible] ந்ததோர்
  கண்ணே—மையலே சகியேன் மின்னே
  மகா மோக மாகினேன்.



பாட்டு நெ 11. [அகலிகை.

போதும் போதுமையா—நீது மொழி
மாது முன் கொண்டீர் மகா மோகம்
வாது செய்வதே அவிவேகம்—பழி
புரந்தர உமது அறிவிது சாலும்
புகழ்பெரும் அமரர்கோன் நெறியிது போலும்
தரந் தெறியாமற் பேசுரீர்மேலும்
சடுதி அகலாவிடிற் கெடுதி மிகவிளையும்.

பாட்டு நெ 12. [சிஷ்யர்கள்.

(1-வது சிஷ்யன்.)

விடியு முன்பாக துடிதுடிப்பாக வெளியே போகணும்;
காய்ந்த விறகே தேடணும்—அதை
விரைவினிற் சமய லறையினிற் சேர்த்த
பிறகே கூடணும்; கல்வி முறையே பாடணும்.

(2-வது சிஷ்யன்.)

விழுந்திடுமிலைகளை எழுந்ததும் பொருக்கியே
வேகமாய்ச் சேர்க்கணுமே; சுவடியை
யூகமாய்ப் பார்க்கணுமே—தினம்.

(3-வது சிஷ்யன்)

மேலான அருவியிலே விழுந்த தண்ணீர் பிடிக்கணுமே
மெய்யாம் மண்பாண்டங்களில் மிகநிறப்பி
பிடிக்கணுமே—மேலே படிக்கணுமே;
மேம்படுவீதம் சோம்பலில்லாமல் வேலையை
முடிக்கணுமே—சொன்ன வேலையை முடிக்கணுமே.

பாட்டு நெ. 13. [சிஷ்யர்கள்,

குருகுலம் தனில் முதல் சுயம்பாகமே—கற்றுக்
கொண்டவர்க்கே வரும் தவயோகமே நல்ல

(1-வது சிஷ்யன்.)

மனங்] கோணுமல் விறகுந்தான் கொண்டுவந்தேன்

(2-வது சிஷ்யன்.)

இதோ] கிழியாத இலையாக கொண்டு வந்தேன்

(3-வது சிஷ்யன்.)

காணும்] குளிர்ந்ததோர் தெளிந்த நீ ரெடுத்து வந்தேன்.

பாட்டு நெ. 14. [சிஷ்யர்கள்.

நாளைக் கருக்கலிற் கூடவேணும் நல்ல கங்கையில்
விளையாட வேணும்
வாளைக் கனிகளைத் தேடவேணும் வயறு நிறையத்தின்றே
பாடவேணும்.

(தொகையறா.)

வந்தநாள் முதலாய் என்னை வதைக்கின்றார் வாத்தியாரே
எந்தநாள் படித்து நான் முன்னேறவேன் இவர்கள் நேரே.

(பாட்டுத் தொடர்ச்சி.)

சாப்பாட்டு ராமனும் கூப்பாடு போட்டிங்கே
தவிக்கின்றான் பரி தாபமே.

(தொகையறா.)

கட்டாயப்படுத்தி யாரும் கல்விபோதிக்கக் காணேன்
முட்டாளாய்ப் பெயரும் பெற்றே முழுமூடனாகப்போனேன்.

(பாட்டுத் தொடர்ச்சி.)


பாவ மிவனையும் கூட சேர்ப்போம் பழைய
பாடத்தைச் சொல்லிக் கொடுப்போம்.

பாட்டு நெ. 15. [நாரதர்.

பரம பிதாவே பார் மகள் கோவே
வரமருள் தெய்வம் நீயே, வணங்கினேனுனையே
வேதன் மாலரன் வேறே காண்கிலேன்
நாதனாய் எங்கும் நிறைந்தாய்
சரணம் மகா.

பாட்டு நெ. 16. [சிஷ்யர்கள்.

கல்யாணக் கொண்டாட்டம்; கல்யாணக் கொண்டாட்டம்
கடைசியிலே பள்ளிக்கூடம் திண்டாட்டம் வாத்தியார்,
கட்டி வைப்போம் ஏடுகளை எட்டிப்பார்ப்போம் வீடுகளை
அல்லும் பகலுமாக அடுப்பூதி படித்துவிட்டோம்
அஞ்சாறு எழுத்துக்களை அஸ்திவாரமாகத் தொட்டோம்
ஆச்சுதினி குடித்தனத்தை நடத்துவோம்—குரு
ஆணைப்படி நாம்காலம் கடத்துவோம்
அண்ணன்மாரே தம்பிமாரே.



பாட்டு நெ. 17. [தேவலோகப் பெண்.

முயற்ச்சியுடையோர் இகழ்ச்சி யடையார்
அயற்சி யறவே நினைத்தபடியே யாவுமே கைகூடும்
அருந்தைர்யம் நீடும்
பயமில்லை என்றால் ஜெயமே வருமே
நயவழி சென்றால் உயர்வு தருமே
புயபலக்குன்றால் புனிதர் தமையே
போற்றுவார் சதா வற்றுவாருண்மையே

பாட்டு நெ. 18. [இந்திரன்.

ஆருயிர் நாயகி நானுன்னை மறவேன்,
சேருதென்றுவி சகியேன் மோகம்
சுபதினமிதுவே ரதியே வாராய், சுகமேதாராய்
சோபித மதிமுகி, தோகையுன் சேவையே தருவாய்
காமவிகாரத்தாலே நான் கூவி, கதறினேன்
தனியே கனியே தேவி
தாமதித்தால் சந்தேகமென்றுவி, தாயகி நீயே
துணையே.

பாட்டு நெ. 19. [சிஷ்யன்.

மகிமைக் கற்பகமரமே மனப்படி கொடுப்பாயே வரமே
ஒரு மாங்காய்; ரெண்டு தேங்காய்; மூன்று
வாழைப் பழமும் வேணும் மரமே.
சுகமாக வுடுத்தச் சரிகை சோமனும் வேணும்
பட்டு சொக்காவும் வேணும் தலைக்கு
சொர்ணக் குல்லாய் வேணும்
(சந்தம்.)
கொஞ்சம் சோறும் படைக்கவேணும்
பலகாரப்பக்ஷணம் வேணும்.
(பாட்டுத் தொடர்ச்சி.)
நான்—சொக்கி மயங்கும் படிக்கு நடிக்கும்
சுந்தரியைத் தரவேணும் வேணும்.

பாட்டு நெ. 20. [கற்பகப்பெண்.

கண்ணுறக் காணக்காண காக்ஷியான அதிசயமே
காமினியென் கவலைதீரக் காதல் கூறும் புதுமையமே

பெண்ணாக யானுமிங்கே பிறந்தவகை தெரிகிலேனே
பேசவொரு துணையுமில்லை பிழைக்கும்விதம் புரிகிலேனே
பெற்றோரின்னாரெனவே,பேதை யானுமறிகிலேனே.

பாட்டு நெ. 21 [கற்பகப்பெண்

அம்மாடி பருவதம்போல் யாரோ ஒரு குண்டோதரன்
அசையாமல் நிற்குறானேயோ—மதயானையைப்போல்
அசையாமல் நிற்குறானேயோ—இது
யாரையும் மிரட்டும் தன்மையே—
தஞ்சாவூரில் செய்யுருட்டுப் பொம்மையே,

பாட்டு நெ. 22. [சிஷ்யன், கற்பகப்பெண்.


(சிஷ்யன்.)
கண்ணே என் கற்பகப் பெண்ணே—[கமலக்]
ரெண்டுபேரும் கல்யாணம் பண்ணிக்கொள்வோம்—வா
(கற்பகப்பெண்.)
நீயொரு மனுஷன்தானா நீட்டிப் பேசாதே
[illegible]தும்—[illegible] த்திக்கோ
சேவி[illegible] சும்மா சிறிக்கிறாய் மதங்கொண்டு
வெறித்தோயும் மதுவையுண்டு சொக்கும்
சும்மாபோலே யிறண்டு மிறண்டு
(சந்தம்.)
உன்—தொந்தி வயித்துக்கும் மந்தி குணத்துக்கும்
பெண்டாட்டி ஒருகேடா
உன்னை—பிடித்த சனியன் என்னையும் பிடிக்கும்
பேசாமல் நடமூடா
இந்தப்—பேராசை தனைவிடுவாய் குருவை
சீராய்தினம் கும்பிடுவாய்
ஊஹூம்—போதும்; சிங்காரம் சகிக்கலே

பாட்டு நெ. 23. [இந்திரன்.

பரிவுடன் குறித்தவாரே பரந்த பூலோகம் சுற்றி
விரைவுடன் வந்தேனென் பால் விளம்பியபடியன்பாக
அரிஹர முனிவர் தேவர் அறிந்திட அகல்யா மாதை
திருமணம் புரிவிப்பீரே, தினமிதிற் சேவித்தேனே.

பாட்டு நெ. 24. [இந்திராணி.

மனம் வருந்தியே நொந்திடலாமா—மதன துரையே
பரமாதிடம் மையலேன் பூமா—துயரேனோ இதிலே
பாபமே மிகவே வருமே



இனியாவது தயவே கூறீர்—இது ஆகாதடியாள் சோகமே
தெரிவீர் துரையே.

பாட்டு நெ 25. [அகலிகை.

கணவரே தெய்வம் பதிவ்ரதம்; காப்பதே சைவம்
காதல் கூறும் நாதன் பாதம் நீதம் பணிந்திட
மோக்ஷமே
ஆவல்நீடி எவல்கூடிச் சேவை
புரிவதே பாக்யமே

பாட்டு நெ. 26. [கௌதமன்.

கற்புடையமாதே ஆன்று கடலிடைப்பிறந்த கோதே—ஈசன்
பொற்பதமடைய யான்று புரிந்திடில் மாதவமே
கற்பதம்யாவும் பெற்று நமனையும் வென்று வாழ்வோம்
இப்பதிக் கோதுமுண்டோ இயம்புவாய் இனையும்தானே.

பாட்டு நெ. 27. [அகலிகை.

கவரிமானே உன்னைக் கண்ணால் கண்டேனே
கனிவுடன் விளையாடத் துணிவுங் கொண்டேனே
சிவனருங்கரமே சேர்ந்தபேரினமே
திருடனைப்போல் மருளாதே யென் முனமே
சீருடனே தவம்செய்ய நீனைதினமே
சிறந்த உன்னிடமன்பு நிறைந்ததிங்கனமே.

பாட்டு நெ. 28. [இந்திரன், அகலிகை.

(இந்திரன்.)

சேந்திருமடமானே மோகினியே —தேவர்க்கமுதத்
தேனே—மா கனியே
இந்த்ரபோகம் இனிது சிராய் எய்தவே நேராய்
நீவாராய் எய்தவே நேராய்.

(அகலிகை.)

கற்புடையோர்க்கே பெரிதோ உன் போகம்
கருதி நீ யறியாததென அவிவேகம்
அற்பத்தனமாய் அறிவையிழந்தே அவதியுறநேரே
வந்தீரே—அவதியுற நேரே,

பாட்டு நெ. 29. [கௌதமன், அகலிகை.

ஜெயரகுபதி நிதம் வாழ்க வாழ்க
சேவைதந்தாயே மூவரும் நீயே
ஜெகந்தனில் சுகம்பெறப் புகன்றனம்
திசை புகழ்நேமா தசரத ராமா
திருமணம் விரைவினிற் பெருகவே.

சதி அஹல்யா.


முக்கிய நடிகர்கள்.

K. தவமணி தேவி	அகலிகை
T. M. சங்கர்	இந்திரன்
S. D. சுப்பையா	நாரதர்
S. V. தாத்தாச்சார்	கௌதமர்
S. N. சிவக்கொழுந்து	விஸ்வாமித்திரர்
T. R. துளசிபாய்	இந்திராணி
S. L. வெங்கிடநர்ராயண ஐயங்கார் S. S. சகுந்தலா	காமிக்

வேணுபாய், ரத்தினம், ஜீவரத்தினம்,
முதலியவர்கள்.

பாடல்கள்:— பாஸ்கரதாஸ், மதுரை.

ம்யூசிகல் டைரெக்ஷன்:— R. பாலுசாமி.



K,B,S,MANIAM

திரையிற் கேட்ட தேனினு மினிய கீதங்களையும்,
வசனங்களையும், மனையிற் கேட்டு மகிழ்வுற,
நான்கு பிளேட்களில் அடங்கிய

"சதி அகல்யா"

கிராமபோன் செட் கேட்டீர்களா?
இன்றே வாங்கி மகிழுங்கள்.



சரஸ்வதி ஸ்டோர்ஸ்,
மதராஸ்.



அடுத்த படம்:—

தரணியின் நிலையைத்
தத்ரூபமாகக் காட்டவல்லது.

கரடுமுரடான காதல் வாழ்க்கையைச்
சீர்ப்படுத்திக் காட்டும் திறமை மிக்கது.

"காதலோ காதல்"

காதல் போயிற், காதல் போயிற்............

"பத்ம ஜோதி"

சமூகப் படத்தில் காணலாம்.

MANICKAVILAS PRESS, SHEVAPET SALEM.

